I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.109/2022

**Name** : Anbu
**Father/Husband Name** : Krishnan
**Age** : 64

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.11.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 12.15 p.m**

**1,2,4 மற்றும் 5 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் வாதி என்றால் சரிதான். நான் மான நஷ்ட ஈடு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் பொது வாழ்க்கை ஈடுபட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. பொது வாழ்க்கை என்றால் என்னவென்றால் பொது மக்களுக்கு சேவை செய்வதாகும். என்ன சேவை செய்வீர்கள் என்றால் பணத்தால் உதவி செய்வேன். என்னுடைய உழைப்பும் உதவி செய்வேன். ஒரு நபர் அரசியல் கட்சியில் இருந்தால் அது பொது வாழ்க்கையா என்றால் பொது சேவை செய்வதற்கு தான் அரசியலுக்கு வருகிறார்கள்.

3. நான் அரசியல் கட்சியில் உறுப்பினராக உள்ளேன். அந்த தற்போது ஆளுங்கட்சி என்றால் சரிதான்(DMK). அரசியல் கட்சியில் உறுப்பினராக இருப்பதே என்னுடைய முழு நேர தொழில். நான் அரசியல் கட்சியல் இருப்பதால் பொது சேவையில் பணம் சம்பாதிக்கிறேன் என்றால் இல்லை.

நான் தனியார் Building Contractor ஆக இருக்கிறேன்.

4. பொது வாழ்க்கையில் இருக்கும் முறையில் அரசியல் கட்சியிலிருந்தோ ஊக்கத் தொகையோ பெறுகிறோனா என்றால் இல்லை. அரசியலில் இருந்து தியாகம் செயகிறீர்களாக என்றால் என்னால் முடிந்த தியாகம் செய்கிறேன். பொது மக்களில் அனாதையாக யாராவது இறந்து விட்டால் அவர்களுக்கு சேவை செய்து வருகிறேன். RO போட்டு தண்ணீர் வழங்குகிறேன். நான் காட்பாடி பக்கத்தில் கல்புதூரில் வசிக்கிறேன்.

5. நான் அரசியல் கட்சியை சார்ந்து பொது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேனா என்றால் கவுன்சிலர் ஆக நான் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். நான் 1வது வார்டு உறுப்பினர் என்று காட்டுவதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அமர்நாத், ஜனார்தனம், சிவக்குமார், குமார் இவர்கள் மீது நான் வழக்கு தாக்கல் செய்வதற்கான காரணம் என்னவென்றால் இவர்களில் 2 பேர் அமர்நாத் மற்றும் ஜனார்தனன் மற்றும் குமார் ஆகியோர்கள் எதிர்கட்சியில் தொடர்ந்து நின்று தோற்றவர்கள். 1, 2 மற்றும் 5 ஆகியோர்கள் அரசியல் கட்சியை என்பதை காட்டுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. மேற்படி பிரதிவாதிகள் மீது மான நஷ்டஈடு கேட்கும் நிலையில் அவர்கள் எந்த வகையில் எனக்கும் என் குடும்பத்திற்கும் களங்கம் ஏற்படுத்தினார்கள் என்றால் என்னுடைய பெயரில் ஒரு போஸ்டர் ஒட்டியிருந்தார்கள். பிரதிவாதிகள் அவர்கள் பெயர் 1,2 மற்றும் 5 ஆகியோர்கள் பெயரை போட்டு தான் அந்த போஸ்டர் ஒட்டியிருந்ததா என்றால் இல்லை.

7. யார் ஒட்டினார்கள் என்றோ யார் ஒட்டச்சென்னார்கள், யார் பிரிண்ட்

போட்டாரகள், போன்ற விவரங்கள் போஸ்டரில் இல்லையென்றால் அவர்கள் ஒட்டியதை 2 பேர் பார்த்திருக்கிறார்கள். இந்த நபர்கள் ஒட்டினார்கள் தான் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை நான் தாக்கல் செய்யவில்லை. தகுந்த ஆதாரம் இன்றி கற்பனையாக பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பரிப்பதற்காக இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. என் நோக்கம் சரியல்ல.

8. மேற்படி பிரதிவாதிகள் என்னை பற்றியோ என் குடும்ப உறுப்பினர்கள் பற்றியோ செய்திதாழிலோ தொலைக்காட்சியிலோ மீடியாவிலோ எதாவது என் குடும்பத்தை பற்றியோ என் குடும்ப உறுப்பினர்கள் பற்றியோ கேள்வி பதிலாகவோ அல்லது வேறு வகையிலோ விளம்பரம்படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

9. அமர்நாத், ஜனார்தனன், சிவக்குமார் மற்றும் எ.குமார் ஆகியோர்களின் பெயரில் விளம்பரம் அல்லது பிரிண்ட் செய்யப்பட்டதா என்றால் அறிவிப்போ அல்லது மீடியோவிலோ செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

10. அவர்கள் பேட்டி குடுத்தது உண்மை ஆனால் அவர்களின் பெயரில் வரவில்லை. ஆவணம் சாட்சியங்கள் ஏதும் இன்றி வாய்மொழியாக வரும் சாட்சியங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த 5 பேர்கள் மாவட்ட ஆட்சியரிடம் என் பெயரில் மனு கொடுத்தார்கள்.

11. மேற்படி பிரதிவாதிகள் நான் குறிப்பிட்டுள்ள எந்த அவதூரையும் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ விளம்பரம் செய்யவில்லை என்றால் அது தவறு. இந்த வகையில் நான் தாக்கல் செய்த வழக்கு ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள

வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ள விவரங்கள் எதையும் பிரதிவாதிகளுக்கு எதிராக காவல் துறையில் புகாராக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 07.04.2022ல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் அவர்கள் புகாரை ஏற்கவில்லை. புகாரை எடுக்காத நிலையில் நான் சிவில் நீதிமன்றத்தை நாடி வந்துள்ளேன் என்றால் சரிதான். குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்திருந்தால் நான் புகாரை மறுக்கப்பட்ட நிலையில் நான் நீதிதுறை நடுவர் முன்பு தனிபிராது ஆக தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

12. நான் பலபேர் மீது வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதும் கோர்ட் கேஸ் என்று அழைவது என்னுடைய வழக்கம் என்றால் சரியல்ல. காட்பாடி தாலுக்கா, தாரா படவேடு கிராமம் சர்வே எண்.281 நிலம் பற்றி குறித்து எனக்கு தெரியுமா என்றால் சரிதான். இந்த நிலம் என்ன வகையான நிலம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

13. சர்வே எண்.281 என்பது அரசு நிலம் பாறை மற்றும் நீரோடை என்று அரசு ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

14. நான் பொது வாழ்க்கையில் இருப்பதால் என்னுடைய ஆளுமையை பயன்படுத்தி நான் அரசு புறம்போக்கு நிலத்தில் சர்வே எண்.281/1பி என்று உட்பிரிவு செய்யப்பட்டு விஸ்தீரணம் சுமார் 20 ஏர்ஸ் சொந்தமானது என்று என் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் பட்டா செய்து கொண்டேன் என்றாலும் எந்த வித உரிமை மூல ஆவணங்களும் இல்லாமல் அடைந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. மூலப் பத்திரம் இல்லை. வருவாய் துறையில் பட்டா வாங்கியுள்ளேன்.

15. மாநில அளவில் நில சீர் திருத்த ஆணையரிடம் என் பெயரிலோ என் குடும்ப உறுப்பினர் பெயரிலோ அரசு நிலத்தை குறிப்பாக நீர் நிலை புறம்போக்கு இடத்தை பட்டா வழங்க அலுவலக நடைமுறை உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இந்த கேள்வி நீர் நிலையை பற்றி கேட்கப்படுகிறது என்றும் அந்த சொத்தில் நீர்நிலை இல்லையென்றும் சாட்சியம் தெரிவித்தார்.

16. அரசு புறம்போக்கு நிலத்தை தனி நபர்களுக்கு பட்டா வழங்க மாற்று பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என்று அரசு உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு அரசாங்கத்திலிருந்து G.O வழங்கப்படுவது இல்லையென்றும் மாவட்ட ஆட்சியரும், தாசில்தாரும் தான் வழங்குவார்கள் என்று சாட்சி தெரிவித்தார்.

17. மாவட்ட ஆட்சியர் அரசு புறம்போக்கு நிலத்தை நத்தம் மனையாக பயன்படுத்தலாம் என்று மறு வகைப்பாடு செய்து எனக்கு வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளாரா என்றால் எனக்கு வழங்கவில்லை ஆனால் அதற்கு உரியவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.என் பெயரில் வழங்கவில்லை. என் குடும்ப உறுப்பினர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

18. மாவட்ட ஆட்சியர் வழங்கியுள்ளாரா என்றால் வட்டாட்சியர் வழங்கியுள்ளார்.

19. வட்டாட்சியருக்கு அரசு நிலத்தை மறு வகைப்பாடு செய்து பட்டா வழங்குவதற்கு சட்டப்படியான அதிகாரம் ஏதும் இல்லையென்றால் அது உண்மையல்ல.

20. கங்கா என்பவர் எனது மனைவியின் சகோதரி என்றால் சரிதான்.

21. நான் சட்டத்திட்ட விதிகளுக்கு எதிராக கங்கா பெயரில் வட்டாட்சியர் துணையுடன் உட்பிரிவு செய்து பட்டா வாங்கிவிட்டு மேற்படி

கங்கா 15.07.2019ம் தேதியில் உங்கள் மனைவி சுகுனாவிற்கு தானமாக கொடுத்ததாக நீங்களே பத்திரம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் நான் வாங்கவில்லை கங்கா வாங்கியது எனவே பிரதிவாதி சொல்வது முற்றிலும் பொய். அரசு அதிகாரியான வட்டாட்சியர் உன் வீடு தேடி வந்து பட்டா கொடுக்கமாட்டார்கள் என்றும் என் ஆளுமையில் தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் தவறு, நான் அந்த நேரத்தில் கவுன்சிலர் ஆக இல்லை. ஆனால் பொது வாழ்க்கையில் தொடர்ந்து இருந்து வருகிறேன் என்றால் சரிதான். அப்போது எதிர் கட்சி ஆட்சி இருந்தது (ADMK).

22. நான் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் கங்கா என்பவர் எனது மனைவி சுகுனாவிற்கு சொத்தை தானமாக கொடுத்தார் என்றால் பணம் கொடுத்து தான் நான் வாங்கினோம். ஆனால் பத்திரத்திற்காக தானமாக கொடுத்ததாக செட்டில்மெண்ட் எழுதியுள்ளோம். உங்கள் மனைவி சுகுனா என் மகள் சரண்யா என்பவற்கு 08.11.2019ல் அதே சொத்தை தானமாக கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான்.

23. இவ்வாறு சொத்துரிமை மாற்றம் செய்துள்ள ஆவணங்களின் சர்வே எண்.281 அதன் உட்பிரிவு 281/1பி ஆகிய எண்களுக்கு பத்திரப்பதிவு துறையின் வழிகாட்டி மதிப்பு இதுநாள் வரை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழிகாட்டு மதிப்புப்படி பணம் கட்டியுள்ளேன்.

24. சார்பதிவு அலுவலகத்தில் இந்தப் தானப் பத்திரங்களை அரசு நிலம் என்று காட்டுவதால் பத்திரப் பதிவு மறுக்கப்பட்டு காட்பாடி வட்டாட்சியரின் ஒப்புதலோடு பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு பதிவு ஆவணங்களின் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் சாட்சி சொல்கிறார் பத்திர அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யும்போது அதன் உண்மை தன்மை வாங்க வேண்டும் என்று சொல்வார்கள் அதன் அடிப்படையில்

வாங்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரதிவாதிகள் இந்த குறுக்கு விசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்த நிலம் குறித்து சமூகம் நீதிமன்றத்தில் நீதிமன்ற சான்று பெற்று இந்த நிலம் குறித்த விவரங்கள் வேண்டி விண்ணபித்தபோது வட்டாட்சியரால் பட்டா தனி நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாக அலுவலக கோப்பில் எந்த அலுவலக நடைமுறையும் இல்லை என்று தகவல் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல உள்ளது. மேலும் வேறு எந்த நபர்களுக்கும் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதாகவும் அலுவலக நடைமுறை கோப்பு எதுவும் இல்லையென்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றாலும் அவ்வாறே கணினியிலும் அவ்வாறு பட்டா வழங்கப்பட்டதாக தகவல் இல்லையென்றாலும் என்றால் சரியல்ல. பட்டா இன்னொரு பெயரில் உள்ளது.

25. நான் என்ஆளுமையை பயன்படுத்தி என் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் பட்டா வாங்கியும் பெயர் மாற்றம் செய்துக்கொண்டதின் அடிப்படையில் ஊரைச் சேர்ந்த பொது மக்கள் தெரிவித்த எனக்கு எதிரான கருத்துக்களுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த பொய்யான அவதூறு வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே உங்களுடைய வழக்குரையை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 01.30p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.11.05 18:51:28 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.